# 21. திருமந்திரம் காட்டும் வாழ்வியல் நெறி

முனைவர்.ம.கீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் - 641 043

பழம் பெருமை வாய்ந்த செம்மொழியாம் தமிழ்மொழியில் தோன்றிய இலக்கிய வகைகளுள் சித்தர் இலக்கியமும் ஒன்றாகும். சித்தம் என்பது புத்தி, மனம் ஆகியவற்றைக் குறிக்கும். சித்து என்பது புத்தியால் ஆகிறகாரியமாகும். சித்தர்கள் யோகத்தின் மூலமும் தியானத்தின் மூலமும் பெரும்பேறு பெற்ற சிறந்த இலக்கியங்களைப் படைத்தனர். அவ்வகையில் திருமூலர் இயற்றிய திருமந்திரம் ஒருஞானநூல்; யோகநூல்; சாத்திரநூல்; வழிபாட்டுப் பெட்டகம் என்றெல்லாம் போற்றப்படுகிறது. இறைவன் அருளாலேபாசஞானம் நீங்கப் பெற்ற நிலையில் பதிஞானம் பெற்ற மூலன் உரைத்த அருள் அனுபவ மாலையாகும். முனித உயிர்களை நல்வழியில் நெறிப்படுத்திச் செல்லும் வாழ்வியல் நெறிகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. அதனைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

**திருமூலரும் திருமந்திரமும்**

சைவத்திரு முறைகளில் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமூலரின் திருமந்திரமாகும். 9 தந்திரங்களையும், 3000 பாடல்களையும் உடையது. ஐசவ அடியார்களுள் காலத்தால் முற்பட்டவரும், சித்தர்களுக்கெல்லாம் முதலாவதாகத் தோன்றியவரும் திருமூலரே. தென்னாட்டுத் தலங்களுக்கெல்லாம் யாத்திரை சென்ற தருணத்தில் திருவாவடுதுறை அருகில் உள்ள சாத்தனூரில் இடையன் ஒருவன் இறந்து கிடந்தான். அவனைக் கண்டு ஆடு, மாடுகள் வருந்தியதைக் கண்டார். அச்சிறுவன் மீது கருணை கொண்டு தம் உடம்பை விட்டு,அவன் உடம்பில் புகுந்து ஆடு, மாடுகளை மேய்த்தார். அதன்பின் திருவாவடுதுறை அரசமரத் தடியில் தவமிருந்ததாகவும் பின்னர் ஆண்டுக்கொரு முறைவிழித்து ஒவ்வொரு மந்திரமாக எழுதி, 3000 ஆண்டு காலம் எழுதி வீடுபேறு பெற்றார் என்பர். இந்நூல் திருமந்திரமாலை, மூவாயிரம் தமிழ், தமிழ் மூவாயிரம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. நிலையாமை, உயிர்க்கொலை, கல்வி, பலவகை யோக முறைகள், அன்பு, அறம், வழிபாடு முதலான வாழ்வியல் சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

**அன்பு**

அன்பு என்பது ஒருவருக்கொருவர் பழகிக் கொண்டுநட்புக் கொள்ளும் உறவாகும். அன்பு கொள்ளும் உறவுகளைப் பொறுத்து அல்லது உயிர்களைப் பொறுத்து அன்பு என்ற சொல்லின் பொருள் மாறுபடும். பெற்றோர்களின் மீதும், உறவினர்களின் மீதும் வைக்கும் அன்பு பாசம் எனப்படும். குருவின் மீதுவைக்கும் அன்பு மரியாதை எனப்படும். இறைவன் மீதுவைக்கும் அன்பு பக்தி என்றும், இழிந்த உயிர்கள் மீதுகாட்டும் அன்பு கருணை என்றும் பாகுபடுத்தப்படலாம். திருமூலர் இறைவனையும் அன்பையும் ஒன்றாக நினைக்கின்றார். உயிரின் இரக்கமானது அன்போடுதான் நிலைபெறுகின்றது. மேலும் உலக உயிர்களிடத்து அன்பு செலுத்துவோரே பேரின்ப இறைநிலையை அடையமுடியும் என்றும் சீவனுள் இருக்கும் இறைவனை அறிவதற்கு அன்புவேண்டும் என்றும் கூறுகிறார். இதனை,

**அன்பு சிவம் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவ மாவது யாரும் அறிகிலார்**
**அன்பே சிவ மாவதுயாரும் அறிந்தபின்**
**அன்பே சிவ மாய் அமர்ந்திருந்தாரே (திரு. பா-270)**

என்ற பாடல் உணர்த்துகின்றது. இதில் அன்பே கடவுள் அன்பே சிவம் இரண்டும் வேறுவேறல்ல என்ற திருமூலரின் வாக்கு புலனாகின்றது. மேலும் பெரும்பாலான சித்தர்களின் வழிபாடு அன்பு வழியே ஆகும். திருமூலர் இறைவன் மீதுகொண்டுள்ள அன்பையும் அவ்வன்பினால் விளையும் பயன்களையும் கூறியுள்ளதை,

**"உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்புஆலயம்**
**வள்ளல் பிராணார்க்குவாய் கோபுரவாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவமாகும்**
**கள்ளப் புலன் ஐந்தும் காளாமாணிவிளக்கே" (திரு. பா.1823)**

என்ற பாடலின் மூலம் உள்ளத்தைக் கோவிலாக்கி, சீவனைச் சிவனாக்குவதற்கும் உள்ளன்பேகாரணம் என்று குறிப்பிடுவதன் மூலம் அறியலாம்.

**பசிப்பிணிதீர்த்தல்** : வாழ்வில் அனைத்துஉயிர்களிடமும் அன்புகாட்டுவதோடு அறம் செய்துவாழ்வதும் சிறந்தது. சமுதாயத்தில் அனைவரும் பின்பற்றக் கூடியஅறங்களுள் முதன்மையானது பசிப்பிணிதீர்த்தலாகும். மிகுதியாக பாவகாரியங்கள் செய்தவர்கள் அப்பாவத்திற்குரிய பரிகாரமாகப் பசுவிற்குஒருபிடிப் புல் அளித்தால் பாவம் தேயுமென்றுஅறநூல்கள் கூறுகின்றன. நம்மால் முடிந்தஅளவுஅறம் செய்யவேண்டும். வீரசைவர்கள் இறையடியார்களுக்கு உணவளிக்காமல் நாட்கள் பலவாகினும் உண்ணமாட்டார்கள். உண்பதற்குமுன், இறைவனுக்குப் பச்சிலை கொண்டுவழிபடுதல், பசுவிற்குசிறிதளவாவதுபுல்

கொடுத்தல்,உண்ணும் போதுகைப்பிடியளவாவது உணவளித்தல், தெளிவற்ற சிந்தனை யுள்ளவர்களுக்கு நல்லகருத்துரைவழங்குதல் போன்றன எல்லோரும் ஆற்றக்கூடியஎளிமையானஅறங்களாகும். இதனை,

**யாவர்க்குமாம் இறைவற்கொருபச்சிலை**
**யாவருக்குமாம் பசுவுக்கொருபச்சிலை**
**யாவர்க்குமாம் உண்ணும்போதொருகைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே (திரு.பா.252)**

என்றபாடலின் மூலம் குறிப்பிடுகின்றார். மேலும் அறம் செய்பவர்கள் முக்திக்குஎனத் தவம் செய்யத் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் செய்யும் அறமேஅதற்குவழியாகும் என்றகருத்தும் அறியத் தக்கது.

**தானத்தின் சிறப்பு :** அறம் செய்பவர்கள் மனம்,மொழி,செயல் இவற்றால் அறம் புரியவேண்டும் செல்விருந்தோம்பிவருவிருந்துக்காகக் காத்திருக்கும் தமிழர்பண்பாட்டிற்குரியஉயரியஅறக்கருத்தைத் திருமந்திரம் கூறுகிறது. தமக்குவேண்டியவர்வேண்டாதவர்என்றபாகுபாடோ,உயர்ந்தவர்,தாழ்ந்தவர்எ ன்றவேறுபாட்டுணர்வோ இன்றிமற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். மற்றவர்களுக்குக் கொடுக்கும் பொருள் பழையனஅல்லதுபுதியனவாக இருக்கவேண்டும். இதனை

**ஆர்க்கும் இடுமினிஅவரவர்என்னன்மின்**
**பார்த்திருந்துஉண்மின் பழம்பொருள் போற்றமின்**
**வேட்கையுடையீர்விரைந்தொல்லைஉண்ணன்மின்**
**காக்கைகரைந்துண்ணுங் காலம் அறிமினே (திரு. பா-107)**

என்றபாடலின் மூலம் எல்லோருக்கும் கொடுங்கள் என்றும் கூடியேஉண்ணவேண்டும் என்பதைவிளக்ககாக்கை இனத்தைச் சுட்டிக் காட்டுவதையும் அறியமுடிகின்றது.

**அறம் செய்யார்செல்வம் :** ஒருவன் தான் அனுபவிக்கும் இன்பத்திற்கும், துன்பத்திற்கும் அவன் செய்யும் செயல்களே காரணமாக அமைகின்றன. இளமை, செல்வம், யாக்கை இவையெல்லாம் நிலையற்றவைஎன்று உணர்ந்தாவது அறம் செய்யவேண்டும். பலர்,அறம் இதுவென்றுஅறியாமலும்,அறத்தின் பயனாகவிளங்கும் இறைவனையும் அறியாமலும் வாழ்கின்றனர். இவ்வாறு வாழ்பவர்கள் பிறப்பு, இறப்பால் ஏற்படும் துன்பத்தால் மேன்மேலும் உழன்றுநரகத்தில் வீழ்வார்கள் என்பதை,

**எட்டிபழுத்த இருங்கனிவீழ்ந்தன**
**ஒட்டியநல்அறம் செய்யதவர்செல்வம்**
**வட்டிகொண் டீட்டியேமண்ணின் முகந்திடும்**
**பட்டிப் பதகர் பயன் அறியாரே (திரு. பா-258)**

என்றபாடலின் மூலம்,எட்டிப்பழம் பழுத்துயாருக்கும் பயன்படாதுவீணாகப் போவதுபோல,அறஞ்செயார்செல்வமும் யாருக்கும் பயன்படாதுவீணாகும் எனப் புலப்படுத்துகிறது.

**பிறன் மனை நயவாமை** : பிறர்மனைவியைக் காமஎண்ணத்துடன் நோக்க கூடாது என்ற உயரிய கருத்தை வலியுறுத்துகிறார். தொட்டுத் தாலி கட்டியமனைவி வீட்டில் இருக்கஅவளைவிடுத்துபிறன் மனையைநாடுவதுபலா இருக்கஈச்சம் பழத்தை நாடுவதற்கு ஒப்பாகும் என்றஉயரியகருத்தை திருமந்திரம் கூறுகிறது. இதனை,

**ஆத்தமனையாள் அகத்தில் இருக்கவே**
**காத்தமனையாளைக் காமுறுங் காளையர்**
**காய்ச்சபலாவின் கனியுன்னமாட்டாமல்**
**ஈச்சம் பழத்துக் கிடருற்றவாறே (திரு. பா-244)**

என்றபாடலின் மூலம் குறிப்பிடுகின்றார்.

**மக்கள் தொண்டேமகேசன் தொண்டு** : தானம், தருமம் என்றபெயரில் கோவில்களுக்குச் சிலசெல்வந்தர்கள் பொருளை அள்ளிக் கொடுக்கின்றனர் நடமாடும் கோவில்களாகிய மனிதர்களுக்குக் கொடுக்க மறுக்கின்றனர். இறைவனுக்குக் கொடுக்கும் பொருள் மனிதர்களைச் சென்றடையவதில்லை. ஆனால் மனிதர்களுக்குக் கொடுக்கும் பொருள் இறைவனைச் சென்றடையும் என்கிறார். இதனை,

**படமாடக் கோயில் பகவற் கொன்றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க் கங்காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில்**
**படமாடக் கோயில் பகவற்கதாமே (திரு. பா-1821)**

என்றபாடலின் முலம் விளக்குகிறார். தத்துவங்கள் கூறும் உண்மைப் பொருள் என்றும் மாறாததன்மை உடையனவாகும். அவ்வகையில் தத்துவ நூலாகவும், அறங்கூறும் நூலாகவும், மனிதனை நல்வழிப்படுத்தும் நூலாகவும் திருமந்திரம் திகழ்கிறது. அன்போடுசெய்யும் வழிபாடே சிறந்தது. அகப்புறவழிபாடுகள் பல இருப்பினும் அன்புடன் கூடிய அகவழிபாடேபயன்தரும். அன்பும் சிவமும் ஒன்றுதான் என்றும்,அன்போடுஅறங்களைச் செய்வதேவாழ்வின் பயன் என்றும் அறங்களில் முதன்மையானது உணவறமேஎன்றும் தானத்தின் சிறப்புக் குறித்தும் ஈயாதார்நிலையும், பிறர்மனைநோக்காத் தன்மையினையும் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்துக்களைமனதில் கொண்டுவாழ்வோமானால் வாழ்க்கைவளமடையும் என்பதுதிண்ணம்.